

அமரர் உயர்திரு. பரமலிங்கம் அன்னலெட்சுமி

அவர்களின்

சிவபதப் பேறு குறித்த

# அன்ன காவியம்

2014.02.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

உயர்திரு **பரமலிங்கம் அன்னலெட்சுமி**

அவர்களின்

# சிவபதப் பேறு குறித்த

# அன்ன காவியம்

## 2014.02.24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளி விளக்காய்திகழ்ந்து
அன்புடனும் பண்புடனும் எமை
காத்து ஆளாக்கி வாழ்வில் வழிகாட்டி
சிறப்புடன் வாழவைத்த எம் குல விளக்கே
இன்று எமை எல்லாம் ஒளியிழந்த
பாவிகளாய் பரிதவிக்க விட்டு
மீளாத் துயில் கொண்ட எம்
அன்பு அன்னையின் பாதாரவிந்தங்களில்
கண்ணீரால் வழங்குமிந்த காணிக்கை
மலரை சமர்பணமாக்குகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



இங்ஙனம்
-குடும்பத்தினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



**தாயின் மடியில்**
*1938.03.21*

**காலன் மடியில்**
*2014.01.25*

# அமரர் பரமலிங்கம் அன்னலெட்சுமி

*திதிவெண்பா*

ஆண்டு விஜய வருடம் ஆன நல்ல தை திங்கள்
பூண்ட அபர பட்ச நவமி திதி - ஈண்ட
மாதரசி அன்னலெட்சுமி மண்ணுலகை நீத்து
மாதவன் தாள் சேர்ந்தார் விண்ணுலக
வாழ்வுதனை வேண்டி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தாயின் மடியில்

1934.05.15

காலன் மடியில்

2013.05.10

# அமரர் கந்தையா பரமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோத்திரப்பாடல்கள்

### விநாயகர் தோத்திரம்



திருவும் கல்வியும் சீரும் தளைக்கவும்
கருணையைப் பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமா எமதுளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவோம்.

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓடுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே

திருச்சிற்றம்பலம்

### திருவாசகம

திருச்சிற்றம்பலம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பாய்மையே பெருக்கும் பொழுதினைச்
சுருக்கிபுழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் படித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே
திருச்சிற்றம்பலம்

## திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்
கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றெம் சிவனை
திரு வீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டுகண்டுள்ளம்
குளரவென் கண்கள் குளிர்ந்தனவே.
திருச்சிற்றம்பலம்

## திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்
குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம் பெருகி
விழாவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
படிவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

திருச்சிற்றம்பலம்

இறவாத இன்பவன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றேன்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் யான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன் அடியின் கீழ்
இருக்க வேண்டும்

திருச்சிற்றம்பலம்

## திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

உம்பர்தருத் தேனுமணிக் - கசிவாகி
ஒன்கடலிற் றேனமுதத் - துணர்வூறி
இன்பரசச் தேன் பருகிப் - பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் - றருள்வாயே
தம்பிதனைக் காகவனத் - தனைவோனே
தந்தைவலத் தாலருள்கைக்- கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் - பொருளோனே
ஐந்துகரத்தானைமுகப் - பெருமானே

திருச்சிற்றம்பலம்

## வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வான்முகில் வாழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபதம் எய்திய
## அமரர் பரமலிங்கம் அன்னலெட்சுமி
## அவர்களின் வாழ்க்கை வளம்

இந்து மகா சமுத்திரத்தின் இரத்தின தீபமாம் இலங்கை மணித் திருநாட்டில் அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவு எனும் புண்ணிய பூமியில் கிழக்கு கிராமத்தில் 10ம் வட்டாரத்தில் சீரும் சிறப்புடனும் சைவ வேளாளர் மரபு வழியில் வந்த புகழ் பூத்த குடும்பத்தில் பிறந்த அன்னை அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த உயர்திரு கார்த்திகேசு அன்னுப்பிள்ளை தம்பதியினரின் இல்லறச் சோலையின் நற்பயனாய் செல்லம்மா, இராசலெட்சுமி, அன்னலெட்சுமி, மகாலெட்சுமி, யோகேஸ்வரி ஆகிய பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். இவர்களில் மூன்றாவது பிள்ளையாக அழகும் வளமும் துடிப்பும் நிறைந்த செல்லப்பிள்ளையாய் அன்னலெட்சுமி திகழ்ந்தார். புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற அன்னலெட்சுமி அவர்கள் ஆரம்ப காலத்திலே பகிர்ந்துண்ணும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டார்.

இவர் தனது தாய் தந்தையுடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் எனும் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் காலப்பகுதியில் வனப்புறு மங்கைப் பருவம் கண்டு பெற்றோர் புங்குடுதீவு 9ம் வட்டாரத்தை சேர்ந்த வரும் முரசுமோட்டையில் வாழ்ந்தவருமான சைவ வேளாளர் குலத்திலகர் திருவாளர் கந்தையா சின்னம்மா தம்பதியினரின் மைந்தனான பரமலிங்கத்தை 1962ம் ஆண்டு மணம் செய்து வைத்து மனமகிழ்வு கொண்டார்கள்.

இல்லற வாழ்க்கையில் இணைந்து கொண்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரும் மற்றோரும் போற்றும் வண்ணம் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் வேளையில் நன் மக்கட் பேறு பெற்று சாந்தினி, பாலினி, இந்திரா, சுரேஸ், ரமேஸ், குணேஸ், ஸ்ரீகுமார், பிரேம்குமார் ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்து தாம் பெற்றெடுத்த பிள்ளைச் செல்வங்களை கண்ணும் கருத்துமாக நல்ல பண்புள்ளவர்களாக வளர்த்து வந்த காலத்தில் விவசாயத் தொழில் புரிந்த கணவனுக்கும் உறுதுணையாக வாழ்ந்தவர் அன்னலெட்சுமி அவர்கள். பின் தனது பிள்ளைகளை வெளிநாட்டிற்கும் அனுப்பி வைத்தார்.

தனது பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைக்கும் பொருட்டு சாந்தினிக்கு சத்தியசீலன் என்பவரையும் இந்திராக்கு சவுந்தரலிங்கம் என்பவரையும் ரமேஸிக்கு மாலினி என்பவரையும், ஸ்ரீகுமாருக்கு விஜி என்பவரையும் பிரேம்குமாருக்கு அமுதா என்பவரையும் திருமணம் செய்து வைத்தனர் அதன் பயனாக சயந்தனா, சயந்தன், சுகிர்தனா, லக்ஷிகா, சயானி, டிலக்ஜன், அபிஷா, அக்ஷயன்,அபிசானா, அனுஷியா, அபிநயா, அஸ்வியா, பவித்திரன், சாருஜன் ஆகியோரை அன்புப் பேரப் பிள்ளைகளாக கொஞ்சி மகிழ்ந்தார். இப்படி இருக்கும் வேளையில் வெளிநாட்டில் வசிக்கும் தனது பிள்ளைகள் பேரப்பிள்ளைகளிடம் சென்று அவர்களையும் பார்த்துவிட்டு வந்தார். இவ்வாறு சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் நோயினால் பாதிக்கப்பட்டார், நோயின் தாக்கம் அதிகரிக்க கொழும்பு, வவுனியா யாழ்ப்பாணம் என வைத்தியம் செய்து கொண்டிருக்கும் வேளையில் 10.05.2013ல் தனது கணவனை இழந்தார் அத்துயரில் மீண்டு பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் அன்போடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தோடும் வாழ்ந்து

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் வருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

எனும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற் கிணங்க வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவராவார் இவ்வாறு வாழ்ந்து வரும் காலப்பகுதியில்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்பதற்கிணங்க மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என வாழ்ந்து வரும் வேளையில் தனது 76வது வயதில் தை மாதம் நவமித் திதியில் 25.01.2014ம் திகதி சனிக்கிழமை 1.20 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்பால் எம்மோடு இணைந்து
அனைவரோடும் சிரித்து மகிழ்ந்து
சிந்தையால் கதை பேசி
சுற்றத்தார் அகமகிழ
பாசத்தின் சிகரமாய்
திகழ்ந்த எம் உறவே
உறவுகளை இங்கே தவிக்க விட்டு
மீளாத்துயில் கொண்டது ஏனோ.

**தேற்றம்**

மலடி பால் சுரப்பதுண்டோ
மண்ணும் பொன் ஆவதுண்டோ
நீள் மதியாள் அன்னலெட்சுமி
நிமலனடி சேர்ந்தாளாம் தேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்



**நேரிசை வெண்பா**

**காப்பு**

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்கும் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளறரொலி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ஆறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோதன் என்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்தலைவைத்து உன் இணையடி காக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாள்எனைக் கண்டாள் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணல்எரி தணல்எரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்பும சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொழி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைக ள்நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வதுரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையடி சாஸ்திரம்

08 அடி மிகுந்த பாக்கியம் உண்டு

10 அடி ஆடு, மாடு குறைவிலா வாழ்வுண்டு

16 அடி மிகுந்த செல்வம் உண்டு

17அடி அரசனைப் போல் பாக்கியம் சேரும்

21 அடி பசுக்களுடன் பாக்கியம் சேரும்

27அடி மிக்க செல்வத்துடன் மதிக்க வாழ்பவர்

28 அடி செல்வமும் தெய்வ கடாட்சமும் உண்டு

30 அடி லக்சுமி கடாட்சம் பெற்று வாழ்வீர்

35 அடி லக்சுமி கடாட்சம் உண்டு

36அடி அரசனையும் அரசாள்வார்

41 அடி லக்சுமி குடியிருப்பாள்

45 அடி சற்புத்திரர் உண்டு

52 அடி பொருள் அபிவிருத்தி

56 அடி குடும்ப விருத்தி

60 அடி செய்யும் தொழில் விருத்தி

64 அடி நன்மைகள் அதிகரிக்கும்

66 அடி செல்வம் அதிகரிக்கும்

68 அடி வெற்றிப் பொருள் சேர்க்கை

70 அடி புகழ் அதிகரிக்கும்

72 அடி பொன் பொருள் சேர்க்கை

77 அடி வாகன யோகம் பொருள் சேரும்

80 அடி லக்சுமி கடாட்சம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84 அடி நன்மைகள் பல உண்டு

85 அடி சுபயோகம் அரச ஆதரவு

87 அடி பொருள் யோகம்

88 அடி நன்மைகள் ஏற்படும்

89 அடி பொருள் சேர்க்கை

90 அடி செல்வம் செல்வாக்கும் சேரும்

92 அடி பெருமை புகழ் அதிகரிக்கும்

95 அடி பொருள் சேர்க்கை

## மேலைநாட்டுப் பழமொழிகள்

01. உழைத்தவன் கூலியை அவன் வியர்வை காய்ந்து விடும் முன்பாகவே கொடுத்து விடுங்கள்

02. படித்துக் கெட்ட ஆணில்லை, பணிவால் கெட்ட பெண்ணில்லை

03. மற்றவர்களுடன் நேசமாக உள்ள இடத்தில் தண்ணீர் கூட இனிப்பாக இருக்கும்

04. வாங்கின்றவனுக்கு நூறு கண்கள் தேவை. விற்கின்றவனுக்கு ஒரு கண் போதும்

05. மனிதனுடைய பேச்சுத்தான் அவன் எண்ணங்கள் வெளிப்படுத்தும் கண்ணாடி

06. ஒருவனுக்கு மீன் வேண்டுமானல் மீனைக் கொடுக்காதே. அவனுக்கு தூண்டில் போடக் கற்றுக் கொடு

07. நடந்தால் நாடடெல்லாம் உறவு. படுத்தால் பாயும் பகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோய்களும் பரிகாரமும்

வாந்தி : வாந்தி அடிக்கடி வருவது என்றால் வெங்காயத்தை நைந்து அதை முகர்ந்து கொண்டிருப்பின் வாந்தி வருவது நிற்கும்.

காதில் கட்டி: ரோஜா இதழ்களைக் கொண்டு வந்து அதைச் கசக்கி சாறு எடுத்து அதில் மூன்று துளிகள் வீதம் காதுகளில் விட்டு வர காதுகளில் கட்டி, புண் இருந்தாலும்ஆறிவிடும்.

காது வலி : வெற்றிலையை நைத்து சாறு எடுத்து அதில் இரண்டு மூன்று துளிகள் வீதம் காதுகளில் விட்டு வர காதுவலி குணமாகும்.

பல் வலிக்கு: சிறிதளவு மிளகையும் அதே அளவு வெள்ளை சர்க்கரையையும் எடுத்து சேர்த்து அரைத்து துளாக்கி அதில் சிறிதளவு எடுத்து வலி எடுக்கும் பல் மீது வைத்துச் சிறிது நேரம் வாயை மூடிக்கொண்டிருக்கவேண்டும். பின்பு அதிலிருந்து வெளிப்படும் உமிழ் நீரை உமிழ்ந்து விட்டு வெந்நீரால் வாய் கொப்பளிக்க வேண்டும்.

பல்வலி தாங்க முடியாத நேரங்களில் இம்மாதிரி ஒரு நாளைக்கு மூன்று நான்கு வேளை கூட செய்து வர பல்வலி குணமாகும்.

எரிச்சல் நீங்க : அதியதுரம், திப்பிலி, மிளகு சேர்த்து வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட கண் எரிச்சல் நீங்கும், கண் ஒளி பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கண்கோளாறு | : | சுத்தமான நல்லெண்ணை வெங்காயச் சாறு புளிய இலைச்சாறு இம்மூன்றையும் கலந்து கண்ணில் கட்டி 10 நிமிடம் கழிந்து குளிக்கவும். கண் கோளாறு நீங்கும். |
| கண் வலி | : | ஒருகரண்டி சீரகம் தூள் செய்து நல்லெண்ணையில் போட்டு தலை முழுகி வந்தால் குணமாகும். |
| கண் நோய் | : | முருங்கைக் கீரை, அன்னாசிப்பழம் சாப்பிட கண் நோய் குணமாகும். |
| காது வலி | : | வாழைப் பட்டையை தீயில் காட்டி சூடேற்றிப் பிழிந்து காதில் விட காது வலி குணமாகும். |
| காது குத்தல் | : | தேங்காய் எண்ணையில் சிறிது பெருங்காயத்தை பொரித்து போட்டு ஊற வைத்து பின் அதை இரண்டு சொட்டு காதில் விட காது குத்தல் உடனே நீற்கும். |
| காதில் சீழ் | : | வெற்றிலையை நருக்கி தேங்காய் எண்ணையில் போட்டு காய்ச்சி சிவந்தவுடன் இறக்கி ஆற வைத்து கூசாவில் பத்திரப்படுத்தி காலை மாலை இரண்டு சொட்டு காதில்விட்டு வர சீழ் படிதல் நிற்கும். |
| வாய் புண் | : | தேங்காய் பாலுடன் தேன் கலந்து குடித்தால் வாய்ப்புண் ஆறும். |
| நகச்சுற்று | : | மஞ்சள், அருகம்புல், சுண்ணாம்பு கலந்து பூசி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர குணமாகும்.

பற்கள் உறுதியாக : மாவிலையை பொடி செய்து பல் துலக்கினால் பற்கள் சுத்தமாகவும் உறுதியாகவும் இருக்கும்.

தொண்டைப்புண் : வேப்பம் பூவை கொதிநீரில் போட்டு அதன் ஆவியை தொண்டையில் படும் படி செய்தால் தொண்டைப்புண் ஆறும்.

வாய் நாற்றம் : சட்டியில் படிகாரம் போட்டு காய்ச்சி ஆற வைத்து ஒரு நாளைக்கு மூன்று வேளை கொப்பளித்து வர வாய் நாற்றம் போகும். பல்லும் உறுதி பெறும்.

டொன்சில் நோய்: புளியையும், உப்பையும் சம அளவு எடுத்து மையஅரைத்து நாக்கில் தடவி வர குணமாகும்.

அல்சர் நோய் : தினமும் ஒரு டம்ளர் திராட்சைப் பழச்சாறு குடித்து வர அல்சர் குணமாகும்.

வயிற்று வலி : வடித்தகஞ்சியில் வெந்தயத் தூள் ஒரு கரண்டி பனங்கற்கண்டு 02 கரண்டியும் சேர்த்து கலக்கி குடிக்க குணமாகும்.

மலச்சிக்கல் : பேரீச்சம்பழத்தை இரவில் பாலில் ஊறவைத்து அதிகாலையில் எடுத்து பிசைந்து சாப்பிட மலம் சுலபமாக வெளியேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளமார்ந்த நன்றி

**அமரர். திருமதி பரமலிங்கம் அன்னலெட்சுமி**

அன்பின் உறைவிடமாய் திகழ்ந்து எம்மை வழிநடத்தி
பாதுகாத்து வளர்த்து எம் நல்வாழ்வுக்காய்
தன்னை அர்ப்பணித்த எமது அன்புச் தெய்வம்
25.01.2014 அன்று அமரத்துவம் அடைந்த
செய்தி கேட்டு நாங்கள் மீளத்துயரில் இருந்த வேளை
ஓடோடி வந்து ஆறுதல் சொல்லியும்
அனுதாபச் செய்திகள் அனுப்பியும்
நேரிலும் தொலை பேசியில் துயரறிவித்தவர்களும்
மரணச்சடங்கின் போதும் சகல உதவிகள் ஒத்தாசைகள்
புரிந்த ஆறுதல் கூறிய அயலவர்கள், உறவினர்கள்
நண்பர்கள், அனைவருக்கும் அந்தியேட்டி
வீட்டுக்கிருத்தியம் இன்றைய ஆத்மசாந்திப்
பிரார்தனையிலும் மதிய போசனத்திலும்
கலந்து சிறப்பித்தோருக்கும் மற்றும்
பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவிய
அன்பு உள்ளங்களுக்கும் இம்மலரினை அச்சிட்டு தந்த
சிவா பதிப்பகத்தினருக்கும் எமது உளமார்ந்த
நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

இல:-300, இராமநாதபுரம்
கிளிநொச்சி

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சவிருட்சம்

*கந்தையா+*சின்னம்மா
↓
*செல்லத்துரை+*பொன்னம்மா
*செல்லம்+*தம்பிராசா
*பரமலிங்கம்
*சரஸ்வதி+*தளையசிங்கம்
சின்னப்பிள்ளை+சோமசுந்தரம்
நல்லம்மா+சின்னத்தம்பி

*கார்த்திகேசு+*அன்னுப்பிள்ளை
↓
செல்லம்மா+*இராசையா
இராசலட்சுமி+கணேசமூர்த்தி
*அன்னலெட்சுமி
மகாலெட்சுமி+கோபாலபிள்ளை
யோகேஸ்வரி+சிவராசா

*பரமலிங்கம் — *அன்னலெட்சுமி
↓

- சாந்தினி(பிரான்ஸ்) + சத்தியசீலன் → சயந்தனா, சயந்தன், சுகிர்தனா
- பாலினி (வட்டக்கச்சி)
- இந்திரா (வட்டக்கச்சி) + சவுந்திரலிங்கம் → லக்ஷிகா, சயானி, டிலக்ஜன்
- சுரேஸ் (வட்டக்கச்சி)
- ரமேஸ் (சுவிஸ்) + மாலினி → அபிஷா, அக்ஷயன், அபிஷானா
- குனேஸ் (பிரான்ஸ்)
- ஸ்ரீகுமார்(ரகு) (பிரான்ஸ்) + விஜி → அனுஷியா, அபிநயா, அஸ்வியா
- பிரேம்குமார் (வட்டக்கச்சி) + அமுதா → பவித்திரன், சாருஜன்

* அமரத்துவம் அடைந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

"ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே"

01. அறஞ்செய விரும்பு
02. ஆறுவது சினம்
03. இயல்வது கரவேல்
04. ஈவது விலக்கேல்
05. உடையது விளம்பேல்
06. ஊக்கமது கைவிடேல்
07. எண் எழுத்து இகழேல்
08. ஏற்பது இகழ்ச்சி
09. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டு ஒன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனி நீராடு
17. ஞயம்பட உரை
18. இடம்பட வீடு எடேல்
19. இணக்கம் அறிந்து இணங்கு
20. தந்தை தாய் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர் செய்
23. மன்று பறித்து உண்ணேல்
24. இயல்பலாதன செயேல்
25. அரம் ஆடேல்
26. இலவம் பஞ்சில் துயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகு அலாதன செயேல்
29. இளமையில் கல்
30. அரனை மறவேல்
31. அனந்தல் ஆடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்
34. கிழமைப் படவாழ்
35. கீழ்மை அகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்பது ஒழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட்டு ஒழி
43. சக்கர நெறி நில்
44. சான்றோர் இனத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. சுளிக்கச் சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச் செய்
50. சேரிடம் அறிந்து சேர்
51. சை எனத் திரியேல்
52. சொல் சோர்வு படேல்
53. சோம்பித் திரியேல்
54. தக்கோன் எனத்திரி
55. தானமது விரும்பு
56. திருமாலுக்கு அடிமை செய்
57. தீவினை அகற்று
58. துன்பத்திற்கு இடம் கொடேல்
59. தூக்கி வினை செய்
60. தெய்வம் இகழேல்
61. தேசத்தோடு ஒத்து வாழ்
62. தையல் சொல் கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி
66. நாடு ஒப்பன செய்
67. நிலையிற் பிரியேல்
68. நீர்விளை யாடேல்
69. நுண்மை நுகரேல்
70. நூல் பல கல்
71. நெற்பயிர் விளை
72. நேர்பட ஒழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய உரையேல்
75. நோய்க்கு இடம் கொடேல்
76. பழிப்பன பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடு பெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
81. பூமி திருத்தி உண்
82. பெரியாரைத் துணைக்கொள்
83. பேதமை அகற்று
84. பையலோடு இணங்கேல்
85. பொருந்தனைப் போற்றி வாழ்
86. போர்த் தொழில் புரியேல்
87. மணம் தடுமாறேல்
88. மாற்றானுக்கு இடம் கொடேல்
89. மிகைபடச் சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனைமுகத்து நில்லேல்
92. மூர்க்கரோடு இணங்கேல்
93. மெல்லினல்லாள் தோள் சேர்
94. மேன்மக்கள் சொல் கேள்
95. மை விழியார் மனை அகல்
96. மொழிவது அறமொழி
97. மோகத்தை முனி
98. வல்லமை பேசேல்
99. வாது முற்கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடுபெற நில்
102. உத்தமனாய் இரு
103. ஊருடன் கூடி வாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வேண்டி வினை செய்யேல்
106. வைகறைத் துயில் எழு
107. ஒன்னாரைத் தேறல்
108. ஓரம் சொல்லேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ பதிப்பகம், 05, கனகபுரம்